Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

நாம், நமது கவனத்தை எப்பொழுது
ஆண்டவரே? என்று கேட்பதிலிருந்து,
கர்த்தரை நம்புவதற்குத் திருப்பவேண்டும்.

கர்த்தரை நம்புவீர்களானால்,
என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று
தெரியவில்லையானாலும், சௌகரியமாக இருப்பீர்கள்.

அநேகம் பேர், மாற்றத்தை விரும்புகிறார்கள்.
ஆனால், காத்திருப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.
ஆனால், நாம் காத்திருக்கவேண்டும் என்பதுதான் உண்மை.

மற்றவர்களுக்கு அறுப்பின் காலமாக இருக்கலாம், உங்களுக்கு
விதைப்பின் காலமாக இருக்கலாம்,
ஒப்பிட்டுப்
பார்க்காதீர்கள்.

– ஜாய்ஸ் மேயர்



Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஏக்காளம்

VOL . 4 ISSUE . 3

தனிப்பிரதி ரூ 20/- அக்டோபர் 2010



## தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்




**சொ**ற்களின் மிகுதியினால் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்.

- நீதிமொழிகள் 10:19

நம் எதை பேசவேண்டும் எப்படி பேசவேண்டும் என்ற நோக்கத்தோடு பேசினால் நம் பேச்சு அளவாக இருக்கும். எதையாவது பேசவேண்டும் என்றுபேசிக் கொண்டிருக்கக்கூடாது. யோசிக்காமல் பேசும்போது, மற்றவர்கள் மனதை புண்படுத்தும். அவசியமில்லாமல் பேசாமல் இருப்பதே ஞானமாகும். ஞானமுள்ளவன் அமைதியாக இருக்க கற்றுக் கொள்கிறான். புத்தியில்லாத மனுஷனை காட்டுக்கழுதைக்கு ஒப்பிட்டு கர்த்தர் சொல்லியிருக்கிறார் (யோபு *11:2*). காட்டுக்கழுதை தன்னிச்சையாக சுதந்திரமாக தனியே அலைந்து திரியும். அதன்போக்கை மாற்ற யாராலும் முடியாது. அதுபோல தான் சொல்வது மட்டுமே சரி என்று எண்ணி, தன் விருப்பம்போல நடக்கும் அநேக மக்களை தனித்து திரிகிற காட்டுக்கழுதை என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஓசியா *8:9*). அவர்களது மனது, எண்ணங்கள் யாருடனும் ஒத்துப்போகாது. மற்றவர்கள் சொல்வதை கேட்கமாட்டார்கள்.

> அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்; விவேகி குளிர்ந்த மனமுள்ளவன். பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்; தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்.
>
> - நீதிமொழிகள் 17:27,28

அறிவுள்ளவன் எச்சரிக்கை உணர்வுடன் அளவாகப் பேசுவான். தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் கட்டுப்பாட்டுடன் பேசுவான். எளிதில் கோபமடையமாட்டான். பேசுவதற்கு முன்பு, மற்றவர்கள் கூறுவதைக்கேட்டு ஆராய்ந்து பார்த்து நிதானித்து பதில் சொல்லுவான். அமைதியாக இருந்து புதியவற்றை கற்றுக் கொள்ளுவான். ஆனால், அறிவில்லாதவன் வீணாக பேசி தங்களுக்கு தாங்களே துன்பத்தை வரவழைத்துக் கொள்கிறார்கள் (நீதிமொழிகள் *10:14*). அவர்கள் வாயிலிருந்து பெறப்படுவது அழிவு. ஏனென்றால் அவர்கள் பேசும் வார்த்தைகள் சண்டையை ஏற்படுத்தக்கூடியவை. அவர்கள் பேசும்போது தங்களையே அழித்துக் கொள்வார்கள். அவர்களது சொந்த வார்த்தையே அவர்களை ஆபத்துக்குள்ளாக்கிவிடும்.

> மூடனுடைய உதடுகள் விவாதத்தில் நுழையும், அவன் வாய் அடிகளை வரவழைக்கும். மூடனுடைய வாய் அவனுக்குக் கேடு, அவன் உதடுகள் அவன் ஆத்துமாவுக்குக் கண்ணி.
>
> - நீதிமொழிகள் 18:6,7



தன் மேலும், தனது திறமைகள் மேலும் உறுதியான நம்பிக்கையுடையவனின் (மூடன்) வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் சச்சரவையும், கருத்து வேறுபாட்டையும் கொண்டு வரும். தன்னம்பிக்கையுடையவனின் வாயே அவனை சேதப்படுத்திவிடும். அவனது வெற்றியான வாழ்க்கைக்கு அவனது வாயே தடையாகி விடுகிறது.

நாம் ஒன்றை பேசும்போது எச்சரிக்கையுடன் பேச வேண்டும். ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேச வேண்டும். முக்கியமான காரியங்களை செய்யவேண்டும் என்றால் மட்டும் நீங்கள் பேசலாம். இல்லாவிடில் நீங்கள் பேசக்கூடாது. பேசுகிற வார்த்தைகளை ஒரு நோக்கத்தோடு பேசவேண்டும். மற்றவர்களை உருவாக்குகிற வார்த்தைகளாக, அவர்களை மேலும் வலுவடையச் செய்து, ஆற்றலுள்ளவர்களாக, உறுதியுள்ளவர்களாக மாற்றச் செய்கிற வார்த்தைகளாக பேசவேண்டும். சோர்ந்து போயிருப்பவர்களை மகிழ்ச்சியடையச் செய்யும் வார்த்தைகளாக இருக்கவேண்டும். யோசிக்காமல் நினைத்ததையெல்லாம் பேசினால், நாம் பேசின வார்த்தைகளினால், பல விபரீதமான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும். மூடன் தன் மனதில் உள்ள எல்லாவற்றையும் பேசலாமா, பேசக்கூடாதா என்று யோசிக்காமலே பேசிவிடுகிறான்.

நாம் ஞானமுள்ளவர்களாக பகுத்தறிவுடையவர்களாக இருக்கவேண்டும். ஒரு காரியத்தை பேசும் முன்பதாக நன்றாக புரிந்து கொண்டு, சிந்தித்து, என்ன பேசலாம் என்று முடிவுக்கு வந்தபின் பேச வேண்டும். நாம் புரிந்து கொள்ளும் ஆற்றலையும், சிந்திக்கும் ஆற்றலையும் மனதில் வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒருவரைப்பற்றி அல்லது ஒன்றைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், உன்னிப்பாக கூர்ந்து கவனிக்க வேண்டும். ஒன்றைக் குறித்து கவனமாக, நீண்டநேரம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி சிந்திக்கும்போது, நடைமுறைக்கு ஏற்ற முடிவுகளை எடுக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளலாம்; தெளிவாக எல்லாவற்றையும் அறியலாம். ஏற்ற முடிவுகளையும், தீர்மானங்களையும் எடுக்கலாம். தாவீதை கர்த்தர் தன் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டார். எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்து சாட்சியுங் கொடுத்தார். (அப்போஸ்தலர் *13:22*). தாவீது மரணமடையும் நேரம் வந்தபோது, தன் மகனாகிய சாலொமோனிடம் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய இருதயத்திற்கு ஏற்றவனாக இருக்கும்படி அறிவுறுத்தினான். என்ன செய்தாலும் எங்கு போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கும்படி ஊக்கப்படுத்தினான் (*1* இராஜாக்கள்*2:3*). சாலொமோன் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து, தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளையின்படி நடந்தான். அவன் கர்த்தருக்கு நன்றி சொல்லி தன்னை தாழ்த்தினபோது, கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி நீர் விரும்புவதை என்னிடம் கேள் என்று சொன்னார். சாலொமோன் கர்த்தரிடம் நான் ஏற்ற முடிவுகளை எடுக்க ஞானத்தை தாரும் என்று கேட்டான். உமது ஜனங்களை சிறப்பாக ஆளவும், சரியானபடி நியாயம் விசாரிக்கவும், நன்மைக்கும், தீமைக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளவும், ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும் என்று கேட்டான். சாலொமோனின் ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுத்தார். அவன் நீண்ட ஆயுளையும், ஐசுவரியத்தையும், எதிரிகளின் மரணத்தையும் கேட்கவில்லை. அதனால் ஜனங்களை நியாயம் விசாரிக்க, ஞானமும், உணர்வுமுள்ள இருதயத்தை கர்த்தர் கொடுத்தார். அதோடுகூட அவன் கேட்காத அநேக ஆசீர்வாதங்களையும் கொடுத்தார்.

மெய்யான ஞானத்தை கர்த்தரிடமிருந்து மட்டும்தான் பெற்றுக் கொள்ள முடியும். யாராயிருந்தாலும் அவரிடத்தில் ஞானத்தை கேட்கும்போது அதை பெற்றுக்

கொள்வார்கள் என்று கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார். கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.

இரண்டு ஸ்திரீகளுக்கிடையே உள்ள விவாதத்தை சாலொமோன் எப்படி ஞானமாக தீர்த்து வைத்தான் பாருங்கள். இரண்டு ஸ்திரீகள் ராஜாவுக்கு முன்வந்து நின்றார்கள். இருவர்கையிலும் குழந்தை இருந்தது. முதல் ஸ்திரீயின் கையில் இருந்த குழந்தை இறந்து போய் இருந்தது. அவள் ராஜாவிடம் நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் வாழ்கிறோம். ஒரு நாள் இரவு அந்த ஸ்திரீயின் குழந்தை மரித்தது. நான்தூங்கிக் கொண்டிருந்தபோது, அவள் நடுராத்திரியில் எழுந்து, மரித்த அவளுடைய குழந்தையை என் அருகில் போட்டுவிட்டு, உயிரோடு இருந்த என் குழந்தையை எடுத்துக் கொண்டாள். நான் காலையில் எழுந்தபோது இறந்த குழந்தை என் அருகில் இருந்தது. இது என் குழந்தை அல்ல அவளது குழந்தை என அறிந்து கொண்டேன் என்று சொன்னாள். இரண்டாவது ஸ்திரீ ராஜாவிடம், இவள் பொய் சொல்லுகிறாள், உயிரோடு இருப்பதுதான் என் குழந்தை, இறந்தது அவள் குழந்தை என்றாள். இருவரும் ராஜாவுக்கு முன்பாக வாக்குவாதம் செய்தனர். ராஜா வேலைக்காரனிடம், உயிரோடிருக்கும் குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்கு பாதியை கொடுக்கும்படி கூறினான். இரண்டாவது ஸ்திரீ அதுதான் நல்லது குழந்தையை இரண்டாக வெட்டுங்கள். இருவருக்கும் கிடைக்காமல் போகும் என்றாள். முதல் ஸ்திரீயோ ராஜாவிடம், அக்குழந்தையை கொல்ல வேண்டாம் அவளிடமே கொடுத்துவிடுங்கள் என்று கூறினாள். இவளே உண்மையான தாய் என்று சாலொமோன் சொல்லி, அவளிடம் குழந்தையை கொடுத்துவிடும்படி கூறினான். இஸ்ரவேல் ஜனங்கள் சாலொமோனின் அறிவுத்திறனை பாராட்டி, தேவன்தான் அவனுக்கு சரியான முடிவை எடுக்கும்படி ஞானத்தை கொடுத்தார் என்பதை உணர்ந்து கொண்டார்கள். இப்படிபோல நாமும்ஞானமாய் பேசுவதற்கு கர்த்தரிடம் ஞானத்தை கேட்டு பெற்றுக் கொள்வோம்.

## நாவினால் வரும் பாவங்கள்

நாவானது சிறிய அவயவமாயிருந்தும், பெருமையானவைகளைப் பேசும் (யாக்கோபு *3:5*). சிலர் வாயைத் திறந்தாலே எப்பொழுதும் பெருமையாக பேசிக் கொண்டிருப்பார்கள். தங்களை குறித்தும், தங்கள் திறமைகளைக்குறித்தும், தங்கள் குடும்பத்தைக் குறித்தும், தங்கள் பிள்ளைகளைக் குறித்தும், தங்கள் படிப்பை மற்றும் வேலையைக் குறித்தும், தங்கள் வசதிகளைக் குறித்தும் பெருமையாக பேசிக் கொண்டிருப்பார்கள். கர்த்தர் தான் எல்லாவற்றையும் கொடுத்தார் என்றுசொல்லமாட்டார்கள். நாம் யாரிடம் பேசுகிறோமோ, அவர்கள் எப்படிப்பட்ட மனநிலையில் இருக்கிறார்கள், அவர்கள் குடும்ப சூழ்நிலை என்ன என்பதை அறிந்து, அவர்கள் இருதயத்திற்கு ஏற்ற வார்த்தைகளை பேச வேண்டும். அவர்கள் இருதயத்தின் காயங்களை கட்டுகிற வார்த்தைகளாக, அவர்களை ஆற்றி தேற்றுகிற வார்த்தைகளாக, விழுந்து விடாதபடி நம்பிக்கை தரும் வார்த்தைகளாக, அவர்களை பெலப்படுத்தி எழுந்து நிற்கச் செய்கிற வார்த்தைகளாக இருக்கவேண்டும். இனிய சொற்கள் தேன்கூடுபோல ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும் (நீதிமொழிகள் *16:24*). கர்த்தருடைய அன்பையும், மனதுருக்கத்தையும், இரக்கத்தையும் எடுத்துச் சொல்லுகிறவர்களாக நாம் இருக்கவேண்டும். சோர்ந்து போகிறவர்களுக்கு பெலன் கொடுத்து சத்துவமில்லாதவர்களுக்கு சத்துவத்தை பெருகச் செய்கிற தேவன். யாரிடம் என்ன பேசவேண்டும், எப்படி பேச வேண்டும் என்ற ஞானம் நமக்கு வேண்டும்.

இன்னும் சிலர் மற்றவர்களிடம் பேசும்போது, சிலரை மிகவும் உயர்வாக பேசிக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது அதை கேட்டுக் கொண்டிருப்பவர்கள், தாங்கள் அப்படியாக இல்லையே என்று சோர்ந்து போய் தாழ்வு மனப்பான்மைக்குள்



தள்ளப்பட்டு விடுவார்கள். பட்டயக்குத்துகள் போல் பேசுகிறவர்களும் உண்டு; ஞானமுள்ள நாவோ ஔஷதம் (நீதிமொழிகள் *12:18*). சிலர் மற்றவர்களுடைய மனதை காயப்படுத்தும் நோக்கத்தோடு, அவர்களுடைய சமாதானத்தை குலைத்து போடும்படியாகவே பேசுவார்கள். ஆனால் சிலரோ மற்றவர்களுடைய மனக்காயங்களை ஆற்றும், மருந்தைப்போல பேசுவார்கள். அவர்களுடைய வார்த்தைகள், சமாதானமில்லாமல் கலங்கிப்போய் இருக்கிறவர்களுக்கும், சோர்ந்துபோய் இருப்பவர்களுக்கும் சமாதானத்தை தருவதாக இருக்கும்.

**சீர்கேடான வீண்பேச்சுக்களுக்கு விலகியிரு...**

**- 2 தீமோத்தேயு** 2:16

தேவனிடமிருந்து வெளிப்பாடுகளையும், யோசனைகளையும் பெறாதவர்கள் சொல்லும் பயனில்லாதக் காரியங்களைத் தவிர்த்திடுங்கள். அப்படிப்பட்ட பேச்சுகள், மேலும் நம்மை தேவனைவிட்டு விலகிச் செல்ல வைக்கும். அப்பேச்சுகள் தேவனுக்கு எதிரானது. சிலர் தன்னைக் குறித்தும், தனது ஆற்றலைக்குறித்தும், அளவுக்கு அதிகமாகப் (பெருமை) பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எந்தவித பயனையும் தராத, வீணாகப் பேசிபொழுதை கழித்துக் கொண்டிருப்பார்கள். தேவ நம்பிக்கையற்ற, முக்கியமில்லாத வார்த்தைகளை நீண்ட நேரம் பேசுவதை தவிர்க்க வேண்டும். இப்படி தங்கள் மனம்போன போக்கிலே பேசிக் கொண்டிருப்பவர்களும், அதைக் கேட்பவர்களும் தேவ நம்பிக்கையில்லாதவர்களாக மாறிவிடுவார்கள்.

நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து... (*1* பேதுரு *1:13*). நாம் பேசும் முன்பாக நம் மனதை ஆயத்தப்படுத்திக் கொண்டு, பேசப்போகும் வார்த்தைகளை மிகுந்த கவனத்துடன் எண்ணிப் பார்க்கவேண்டும். பேசும்போது விழிப்புணர்வுடன் பேச வேண்டும். முக்கியமில்லாதவற்றை பற்றி நீண்ட நேரம் பேசி வாதிடுபவர்கள், தேவன் மேல் விசுவாசம் வைத்து அவரை மையமாக வைத்த வாழ்க்கையை வாழவில்லை என்று அறிந்து கொள்ளலாம். தேவபக்தியில்லாத பேச்சுக்கள் பிரச்சனைகளையும், சண்டையையும் உண்டாக்குகிறது. உங்கள் நோக்கத்தையும், நீங்கள் செய்ய வேண்டிய வேலையையும் தடை செய்கிறது.

**உங்களில் ஒருவன்தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால், அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.**

**- யாக்கோபு** 1:26

கர்த்தருக்கு பயப்படும் பயம் வரும்போது, நாம் நமது நாவை பாவத்துக்கு விலக்கி பாதுகாத்துக் கொள்ளலாம். சிலர் உண்மையில்லாததை உண்மை என்று சொல்லி பிறரை நம்பவைப்பார்கள். பொய்பேசி நேர்மையற்றவர்களாக இருந்து மற்றவர்களை ஏமாற்றுவார்கள். கர்த்தரை உண்மையாய் நேசிப்போமென்றால், பொய் பேசமாட்டோம். நாம் பேசும் வீணான ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் கர்த்தருக்கு கணக்கு கொடுக்கவேண்டும். இந்த பூமியிலே நீண்ட ஆயுளோடு வாழ விரும்பும் மனிதன் தீமையானவற்றை பேசாமல் நல்லவற்றையே பேசுவான். சமாதானமாய் வாழ்வான். நாம் தீமையானவற்றை சிந்திக்காமல், நன்மையானவற்றையே சிந்திக்கும்போது, நாம் பேசும் வார்த்தைகளும், நன்மையை தருகிற வார்த்தைகளாக இருக்கும் இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்ற வார்த்தையின்படிநம் இருதயத்தை நல்லதையே சிந்திக்க ஒப்புக் கொடுப்போம். இயேசு கிறிஸ்துவிலிருக்கிற

சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்ற வார்த்தையின்படி, அவருடைய சிந்தையே நம்முடைய சிந்தையாக மாற்றுவோம். நாம் நியாயமாக நேர்மையானவற்றையே பேசும்போது, கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குதத்தமாகிய நீடிய ஆயுளை தருவார்.நாம் மற்றவர்களிடம் உண்மையான அன்புள்ளவர்களாய், அவர்களுக்கு ஊறு விளைவிக்கும் வார்த்தைகளை பேசாமல், தூய்மையான குணங்களை உடையவர்களாய், பரிசுத்தமுள்ளவர்களாய், ஆவியின் கனிகளை உடையவர்களாய் இருக்க வேண்டும்.

> மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள்.
>
> - நீதிமொழிகள் 18:21

நாம் எதைப் பேசுகிறோமோ அதையே அனுபவிப்போம். ஒரு மனிதனின் நாவால் மரணம் அல்லது வாழ்வு நேரும்படியாக பேச முடியும். அதனால் அதிகமாக பேசுகிறவர்கள் அதன் பலனை பெறுவார்கள். ஒரு மனிதனின் வாழ்க்கையை பார்க்கும்போது, அவன் என்ன பேசினான் என்பதை காணலாம். அவன் வாழ்க்கையானது, அவன் பேசும் வார்த்தைகளையே பிரதிபலிக்கிறது. சிலர், கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, தோல்வியான நேரத்திலும், கர்த்தருடைய வார்த்தையை அறிக்கையிட்டு, வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும், வெற்றியான காரியங்களைக் குறித்தே சிந்தித்து, அதையே பேசிக் கொண்டிருப்பார்கள். கர்த்தருடைய வார்த்தையின்மேல் உறுதியான விசுவாசம் வைத்திருப்பதனால், அவர்கள் நன்றாக இந்த பூமியிலே வாழ்ந்து செழிப்பாயிருப்பார்கள். கர்த்தருடைய பார்வையில் வாழ்க்கையின் எல்லா பகுதிகளையும், சூழ்நிலைகளையும் பார்த்து பேச வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை பேசவேண்டும். வாழ்க்கையில் நடக்கும் எதிர்மறையான, தீய காரியங்களை பேசிக் கொண்டிருக்கக்கூடாது. எப்போதும் முறுமுறுத்துக் கொண்டு, தோல்வியான காரியங்களை பேசிக் கொண்டிருந்தால், நம் வாழ்க்கையும் தோல்வியுள்ளதாக மாறிப்போகும். ஆதலால் அவிசுவாசமான, எதிர்மறையான வார்த்தைகளை பேசாமல் இருப்போம். விசுவாசமான வார்த்தைகளையே பேசுவோம்.

தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான் (நீதிமொழிகள் *13:3*). நம் வாயின் வார்த்தைகளே நம்மை நல்லவர்கள் என்றும் தீயவர்கள் என்றும் நியாயம் தீர்க்கும் (மத்தேயு *12:37*). நேர்மையான நல்ல குணங்களையுடைய மனுஷனின் இருதயத்தில் நல்ல காரியங்கள் இருக்கும். அதனால் அவன் இருதயத்திலிருந்து நல்ல காரியங்களையே வெளிப்படுத்துவான். ஒழுக்கமில்லாத, கெட்ட குணங்களையுடைய மனுஷனின் இருதயத்தில் தீய காரியங்கள் இருக்கும். எனவே அவன் தீய காரியங்களையே வெளிப்படுத்துவான். அவன் இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகள் புறப்பட்டு வரும். இருதயத்திலிருந்து புறப்படும் வாயின் வார்த்தைகளே ஒரு மனுஷனை தீட்டுப்படுத்தும் (மத்தேயு *15:11*). அதனால் ஒருவனின் வாய் வழியே வெளிப்படும் வார்த்தைகள், அவனுடைய இருதயத்தில் இருப்பவற்றின் வெளிப்பாடேயாகும். நமது சொற்களும், செயல்களும் நம் இருதயத்தில் மறைந்திருக்கிற மனப்பான்மையையும், உள்நோக்கத்தையும், உண்மையான நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது.

## அபிகாயில்

நாபால் என்னும் மனிதன் தன் ஆடுகளுக்கு மயிர்கத்தரித்துக் கொண்டிருந்தான்.



அந்நாட்களில் ஆடுகளுக்கு மயிர்க்கத்தரிக்கும்போது விருந்து பண்ணுவதும், வேலை செய்பவர்களுக்கும், உதவி செய்தவர்களுக்கும் வெகுமதி அளிப்பது வழக்கமாயிருந்தது. நாபாலின் மேய்ப்பர்கள், வனாந்தரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, தாவீதும் அவனோடிருந்த ஆட்களும், அவர்களும் பாதுகாப்பாகவும், உதவியாகவும் இருந்தார்கள். நாபாலின் மேய்ப்பர்களுக்கு ஒரு தீமையையும் செய்யவில்லை. இரவும், பகலும் அவர்களை காப்பாற்றி ஒரு மதிலைப் போல பாதுகாப்பாயிருந்தார்கள். அதனால் தாவீது தன்னிடமிருந்து பத்துபேரை நாபாலிடம் உதவிகேட்டு அனுப்பினான். ஆனால், நாபாலோ அவர்களை மனமடியும்படி பேசினான்.

பாருங்கள், பிரியமானவர்களே, நாபால் தனக்கு உதவி செய்த தாவீதை அறிந்தும் அறியாததைப்போல நடந்து கொண்டு அவனை அவதூறாக பேசினான். நாபால் பெரிய பணக்காரனாக இருந்தான். தாவீதின் ஆட்களுக்கு வெகுமதி கொடுத்து, அவர்களை போஷிக்குமளவு, போதுமான அளவு பணமும், பொருட்களும் இருந்தது. ஆனால், அவன் தாவீதின் வேண்டுகோளின்படி, அவனது ஆட்களை போஷிக்க மறுத்து, கடினமாக பேசினான். தாவீது, இதை அறிந்தவுடன் மிகவும் கோபம் அடைந்தான். மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும் (நீதிமொழிகள் *15:1*). நாம் எந்த சூழ்நிலையிலும், உடனடியாக பதில் சொல்லாமல், பொறுத்து, சமாதானமாக பதில் சொல்ல வேண்டும். இப்படி பதில் சொல்லும்போது, கோபம் எல்லாம் மறைந்து போகும். கடுமையாக பதில் சொல்லும் போது, கோபத்தை கிளறி, பிரச்சனைகளை உண்டாகச் செய்யும். ஆனால், இனிய நாவு எலும்புகளையும் நொறுக்கும் (நீதிமொழிகள் *25:15*). நல்லவர்கள் பதில் சொல்லும் முன் சிந்திக்கிறார்கள். தீயவர்கள் (துன்மார்க்கன்) சிந்திக்கும் முன்னரே பேசுகின்றனர். அவை அவர்களுக்கு துன்பம் தரும் (நீதிமொழிகள் *15:28*).

தாவீதின் ஆட்களும், தாவீதும், நாபாலுக்கு எதிராக சென்றனர். இதை அறிந்த, நாபாலின் மனைவியாகிய அபிகாயில், துரிதமாக வேண்டிய போஜனங்களை கழுதையின் மேல் ஏற்றி, வேலைக்காரரை தனக்கு முன்பே அனுப்பி வைத்துவிட்டு அவளும் பின்னே சென்றாள். நாபால் பேசின வார்த்தைகளினால் தாவீது, மிகவும் கோபத்தோடு, நாபாலையும், அவனது ஆட்களையும் கொன்று போடும்படி வந்து கொண்டிருந்தான். அபிகாயில் தாவீதை சந்தித்தபோது, தீவிரமாக அவனுக்கு முன்பாக தரையில் விழுந்து பணிந்து, ''என் ஆண்டவனே, இந்த பாதகம் என்மேல் சுமரட்டும் என்றாள். தாவீது அதை கேட்கிற மனநிலையில் இல்லை. ஆனாலும், அபிகாயில் பேசுவதை தாவீது கேட்டான். பின்பு அவள் நாபால் தன் பெயரைப்போலவே அறிவீனனாக, அற்பனாக இருக்கிறான். நீர் இரத்தம் சிந்தி, அப்பாவி மக்களை கொல்வதிலிருந்து கர்த்தர் உம்மை விலக்குவாராக; அப்பாவி மக்களை கொன்றபழி உமக்கு வரக்கூடாது, கர்த்தர் உம்மை நிச்சயமாக ராஜாவாக்குவார்; அப்பொழுது, இந்த இரத்தப்பழியினிமித்தம் உம் மனசாட்சி உம்மை குற்றப்படுத்தக்கூடாது. அதற்கு உம்மை விலக்கி பாதுகாத்துக் கொள்ளும் என்று ஞானமாய் புத்தி சொன்னாள்.



பாருங்கள், தாவீது மிகுந்த கோபத்தில் இருந்தபோதும், அபிகாயில் கூறுவதை

பொறுமையுடன் கேட்டான். நாம் நம்முடைய வாழ்க்கையில், கோபமான சூழ்நிலை வந்தாலும் தாவீதைப்போல பொறுமையுடன், மற்றவர்கள் கூறுவதை கேட்கவேண்டும். தாவீது, அபிகாயிலின் ஆலோசனையை அலட்சியப்படுத்தியிருந்தால், நாபாலையும், அவனது ஆட்களையும் கொன்று பழிக்கு பழி வாங்கியிருந்திருப்பான். அவனது மனதும் உறுத்திக்கொண்டேயிருந்திருக்கும். நாம் மிகுந்த எச்சரிக்கையுடன், அமைதியாக இருந்து, மற்றவர்கள் பேசுவதை கேட்க வேண்டும். அப்படி கேட்க நாம் முயற்சி செய்தால், மனவருத்தத்திற்கும், தொந்தரவுக்கும் விலக்கி நம்மை காத்துக் கொள்ளலாம். அவசரப்பட்டு முடிவெடுக்கும் போது பல ஆபத்துக்களையும், இழப்புகளையும், மனவேதனையையும் சந்திக்க நேரிடும்.

அபிகாயில் மகா புத்திசாலியாயிருந்தாள். தன் கணவன் தாறுமாறாக பேசியதால், தாவீதிடம் தீவிரமாக சென்று ஞானமாக பேசி வரவிருந்த அழிவை தடுத்து நிறுத்தினாள். நாம் எப்படியாக இருக்கிறோம்? சமாதானம் பண்ணுகிற வார்த்தைகளை பேசுகிறோமா? நம்முடைய சமாதானத்தை காத்துக் கொள்ள வேண்டுமானால், எச்சரிக்கையோடு ஞானமாக பேசவேண்டும். தாவீதை பாவம் செய்ய விடாமல், அவன் புரிந்து கொள்ளும்படி ஞானமாக பேசி, பழிவாங்கும் எண்ணத்தைத் தடுத்தாள். பழிவாங்கினால், அப்பாவிகளை கொன்ற இரத்தப்பழியும், அதன்பின்பு துக்கமும், மன இடறலும் வரும் என்று எடுத்துக் கூறினாள். அதை தாவீது உணர்ந்தபோது, பழிவாங்கும் எண்ணத்தை விட்டுவிட்டான். தாவீது அவளிடம், நான் இரத்தம் சிந்தாதபடிக்கும், பழிவாங்காதபடிக்கும் கர்த்தர் தான் உன்னை நான் சந்திக்கும்படி செய்து பாவத்துக்கு விலக்கி பாதுகாத்தார் என்று சொல்லி அவளை ஆசீர்வதித்தான். அவள் கணவனோ முரடனும், பொல்லாதவனுமாயிருந்தான். அவன் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள், தாவீதையும் அவனது ஆட்களையும் மனமடியச் செய்தது. கோபத்தை உண்டாக்கியது. பிரியமானவர்களே, நாம் எப்படியாக இருக்கிறோம்? நம் வாயின் வார்த்தைகள் மற்றவர்களை காயப்படுத்துகிறவைகளாக இருதயத்தை குத்துகிறதாக, மனமடிவடையச் செய்து, சோர்ந்து போக வைத்திருக்கிறதா? மற்றவர்களுக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறதா? இன்றே நம்மை திருத்திக் கொள்வோம்.

அபிகாயில், தாவீது புரிந்து கொள்ளும்படி ஞானமாகபேசி, தாவீதின் பழிவாங்கும் எண்ணத்தை தடுத்தாள். தாவீதுக்கு யோசனை சொன்னாள் *(1 சாமுவேல் 25:33)*.

அபிகாயில் நாபாலிடத்தில் வந்தபோது, வீட்டில் விருந்து நடந்து கொண்டிருந்தது. நாபால் நன்றாக குடித்திருந்தான். எனவே அவள் விடியும்வரை எதுவும் சொல்லவில்லை. மறுநாள் காலையில், அவன் போதை தெளிந்தபோது, அபிகாயில் நடந்ததை கூறினாள். அப்பொழுது அவன் இருதயம் அவனுக்குள்ளே செத்து அவன் கல்லைப் போலானான். கர்த்தர் நாபாலை வாதித்ததினால் அவன் செத்தான். இப்பொழுதும் அபிகாயில் ஞானமாக நடந்து கொண்டாள்.போதை தெளியும் வரை காத்திருந்தாள். எப்பொழுது அவனிடம் பேச வேண்டும் என்பதை அறிந்து வைத்திருந்தாள். நாமும் நம் குடும்பத்திலுள்ளவர்களிடம் எந்த நேரத்தில் எப்படி பேசவேண்டும், யாரிடத்தில் இன்ன விஷயத்தை பேசலாம், யாரிடத்தில் இன்ன காரியத்தை பேசக்கூடாது, எப்போது பேசவேண்டும் என்பதை புரிந்து கொண்டு பேசவேண்டும். அந்த ஞானத்தை இயேசு கிறிஸ்துவிடம் கேட்டு பெற்றுக் கொள்ளவேண்டும். நாபால் இறந்ததை அறிந்த தாவீது, அபிகாயிலின் அறிவாற்றலையும், சூழ்நிலைக்கேற்றபடி, ஞானமாய் பேசினதையும், சிக்கலான வேளையில் ஆலோசனை சொல்கிறவளாயிருந்ததையும், தாமதமின்றி வேகமாக



செயல்படும் திறனை உடையவளாக இருந்ததையும் கண்டு அவளை திருமணம் செய்து கொண்டான். அபிகாயிலைப் போல நாமும் ஞானமாய் பேசும்போது, கர்த்தரிடமிருந்து உயர்ந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம்.

## பேசுவதில் எச்சரிக்கை

பேசுவதில் எச்சரிக்கையாய் இருப்பவர்கள், வாழ்க்கையிலும் எச்சரிக்கையாயிருப்பார்கள். அதனால் அழிவுக்குத் தங்களை விலக்கி பாதுகாத்துக் கொள்வார்கள். நம்முடைய வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும்போது, அவற்றை மற்றவர்களிடம் சொல்ல காத்திருப்போம். ஆனால், அவற்றை தேவனிடம் சொல்லும் பழக்கம் நமக்கு வேண்டும். தாவீது இப்படியாகக் கூறுகிறான்: என் நாவினால் பாவம் செய்யாதபடி எச்சரிக்கையோடு நான் பேசும் காரியங்களில் கவனமாக இருப்பேன்; தீய மனிதர்களுக்கு முன் இருக்கும்போது, வாயை கடிவாளத்தால் அடக்கி மௌனமாக இருப்பேன் *(சங்கீதம் 39:1)*. பேசும் வார்த்தைகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், நீங்கள் தன்னடக்கம் இல்லாதவர்கள். வார்த்தைகளால் ஒருவரை காயப்படுத்தவும், அழிக்கவும் முடியும். உங்களது பேச்சை உங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால், உங்கள் வாழ்க்கையின் எல்லா காரியங்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

## யோபு

யோபு நல்லவனும், உண்மையுள்ளவனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்று கர்த்தரால் சாட்சி பெற்றவன். யோபுவை சோதிப்பதற்கு சாத்தானுக்கு கர்த்தர் அனுமதி கொடுத்தார். அதனால் அவனுடைய பிள்ளைகள், ஆஸ்திகள், எல்லாவற்றையும் இழந்து போனான். அவன் உடலில் வியாதியும், வேதனையும் உண்டானது. அவன் மனைவி தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். எல்லாவற்றையும் இழந்தபோதும் பாடுகளை பொறுமையோடு சகித்தான். இவ்வளவு துன்பங்கள் மத்தியிலும் யோபு தன் உதடுகளினால் பாவம் செய்யவில்லை. வாயினால் பாவம் செய்ய அவன் இடங்கொடுக்கவில்லை (யோபு *2:10*). கர்த்தரை தூஷிக்கவோ, குறை சொல்லவோ இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை குற்றஞ்சாட்டவில்லை. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தபோது, பாடுகளை, வேதனைகளை சகித்தார். தன்னை சிலுவையில் அறைந்தவர்களை அவர் சபிக்கவில்லை, எதிர்த்து பேசவில்லை. அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயை திறவாதிருந்தார் *(ஏசாயா 53:7)*.



சில மனிதர்கள் குதிரையைப் போலவும், கழுதையைப் போலவும் வாயை அடக்கமுடியாமல் இருக்கிறார்கள். நாம் அவற்றைப் போல மூடத்தனமாக

இருக்கக்கூடாது. அம்மிருகங்களை வழிநடத்துவோர், கடிவாளங்களையும், வார்களையும் பயன்படுத்தாமல், அவற்றை கட்டுப்படுத்த முடியாது (சங்கீதம் 32:9). கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறபடி நாம் வாயை கட்டுப்படுத்த வேண்டும்.

> நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடக்காத பொல்லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.
>
> - யாக்கோபு 3:8

எந்த மனிதனும் தன் சொந்த முயற்சியினால், தன் நாவை கட்டுப்படுத்த முடியாது. ஆவியானவருடைய பெலத்தினால் நிரப்பப்பட்டால் மட்டுமே தங்கள் நாவை கட்டுப்படுத்த முடியும். நாவுகள் விஷமுள்ள பாம்புகளைப் போன்றவை. நாவுகளின் கீழ்பாம்பின் விஷம் இருக்கும். சிலர் தங்கள் நாவினால் பொய் பேசி வதந்திகளை பரப்புவார்கள். சிலர் மற்றவர்களை எப்பொழுதும் குறைசொல்லிக் கொண்டேயிருப்பார்கள். இன்னும் சிலர் மற்றவர்களின் நற்பெயரை கெடுக்கும் நோக்கத்துடன் அவர்களைக் குறித்து அவதூறாக பேசிக் கொண்டிருப்பார்கள். மற்றவர்களைப் பற்றியும், அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி உண்மைக்குப் புறம்பாக வீணாக வம்பு பேசிக் கொண்டிருப்பார்கள். யாக்கோபு நாக்கை நெருப்புக்கு ஒப்பிட்டு பேசுகிறான். நாவின் தீய குணங்களுக்கு பிறப்பிடமாக நரகம் உள்ளது. கட்டுப்பாடற்ற நாவால் பயங்கரமான சேதங்கள் வரும். நாவை சாத்தான் பயன்படுத்தி ஜனங்களை பிரிக்கிறான். ஒருவருக்கொருவர் சண்டையை உண்டாக்கி மோதச் செய்கிறான்.

நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம் (யாக்கோபு 3:6). நாம் பேசும் முன்பதாக "வார்த்தைகள் தீயை போன்றது" என்பதை மறந்து விடாமல் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். கோபத்தில் பேசிய வார்த்தைகள் உறவை அழிக்கும். பேசின வார்த்தையின் தழும்புகள் அப்படியே இருக்கும். ஒருவருடன் உண்மையான அன்பில்லாமல், வெறுப்புணர்ச்சியுடன் பேசப்படும் வார்த்தைகள் வேகமாக பரவி சீக்கிரத்தில் அழிவை உண்டாக்கும். வார்த்தைகளை பேசினபின், அதனால் வரும் விளைவை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. பேலியாளின் மகன் கிண்டி விடுகிறான்; எரிகிற அக்கினி போன்றது அவனது உதடுகளில் இருக்கிறது (நீதிமொழிகள் 16:27). மற்றவர்களைக் குறித்து நல்லதையே பேசுவோம்.

நாம் பேசும் சொற்களை குறித்து கவனமாக இருக்கவேண்டும். மற்றவர்களை மகிழ்விக்கும் எண்ணத்துடன், அவர்களை தற்பெருமை கொள்ளச் செய்யும் வார்த்தைகளை பேசக்கூடாது. முகப்புகழ்ச்சி செய்கிறவர்களையும், வீண் பெருமை பேசுகிறவர்களையும் அவர்கள் பேசாதபடி கர்த்தர் அவர்கள் வாயை அடைத்துப் போடுவார். பெருமை பேசுதல், முகஸ்துதி செய்தல், பொய் பேசுதல், புறங்கூறுதல், சண்டையிடுதில், மற்றவர்களுக்குள் சண்டை உண்டுபண்ணுதல், மற்றவர்களை குத்தி பேசுதல், மிகைப்படுத்தி பேசுதல், சபித்தல், இருதயத்தில் வஞ்சகத்தை வைத்துக் கொண்டு வெளியே அன்புள்ளவர்களைப் போல நடித்து பேசுதல் ஆகிய பாவங்களை செய்பவர்களை கர்த்தர் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். கர்த்தர் இப்பாவங்களை வெறுக்கிறார். இப்பாவங்கள் மோசமான எண்ணங்களிலிருந்து புறப்பட்டு சொற்களாக வெளிவருகின்றன. தேவன் வெறுக்கும்





இப்பாவங்களை நாமும் வெறுப்போம். இப்பாவங்கள் நம்மிடமிருந்தால், இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு, மனந்திரும்புவோம். ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று அவருடைய வல்லமையினால் நிரப்பப்படுவோம்.

இயேசுவைப் போல சிந்திப்போம், பேசுவோம், நம் ஆயுசு நாட்களை காத்துக் கொள்வோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக.




**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | **ரூ.** | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | **ரூ.** | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா






நாம் எல்லோருமே நமது வாழ்க்கையில் நன்மையானக் காரியங்கள் நடக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அநேக நேரங்களில் அதை நாம் உடனே நடக்க எதிர்பார்க்கிறோம். இனி அல்ல, இப்பொழுதே. அது நடக்காதபோது, நாம், எப்பொழுது,ஆண்டவரே, எப்பொழுது? என்று கேட்க ஆரம்பிக்கிறோம். நாம், நமது கவனத்தை எப்பொழுது ஆண்டவரே? என்று கேட்பதிலிருந்து, கர்த்தரை நம்புவதற்குத் திருப்ப வேண்டும். உங்களது சந்தோஷத்தையும்,நிம்மதியையும் இழந்து காணப்படுகிறீர்களென்றால், நீங்கள், கர்த்தரை நம்பவில்லை என்று அர்த்தம். உங்களது வாழ்க்கையில் நடந்துகொண்டிருக்கும் காரியங்களையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். சில சமயங்களில் அப்படி அறிந்துகொள்வது அசௌகரியமாயிருக்கும்; உங்களை பாதிப்பதாக இருக்கும்.

என் வாழ்க்கையில் அநேகக் காரியங்களை நான் அறிந்துகொள்ள முடியாததால், பொறுமையிழந்தும், வெறுத்தும், ஏமாந்தும் போயிருந்தேன். கர்த்தர், அப்படிப்பட்ட எண்ணங்களை என்னைவிட்டு அகற்றிப்போடக் கற்றுக்கொடுத்தார். கடைசியாகக் கற்றுக்கொண்டேன், எல்லாவற்றையும் தெரிந்துவைத்திருக்கும் கர்த்தர் மேல் என் நம்பிக்கையை வைக்க. சில கேள்விகளுக்கு நம்மால் பதில்களைத் தெரிந்துகொள்ள முடியாது என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். நாம் கவலைப்படாமல் இருப்பதன்மூலம் கர்த்தர்மேல் வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

நாம், நமது சுய அறிவை வைத்து அல்ல, கர்த்தர் வெளிப்படுத்தும் அறிவை வைத்து வாழ, கர்த்தர் வாஞ்சிக்கிறார். நமது அறிவினால் எல்லாவற்றையும் அறிந்துகொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தோமானால், கர்த்தர் வெளிப்படுத்தும் அறிவை உணர்ந்துகொள்வது கடினமாகும். கர்த்தரை நம்புவீர்களானால், என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்று தெரியவில்லையானாலும் சௌகரியமாக இருப்பீர்கள். கர்த்தரை நம்புவதற்கு, அவர் எப்படி செய்யப் போகிறார்? எப்பொழுது செய்யப் போகிறார் என்றெல்லாம் தெரியாமல் இருப்பது அவசியமாகும். கர்த்தர் எப்போதுமே காலதாமதம் செய்யமாட்டார் என்கிறோம். ஆனால்,பொதுவாக, முன்னரும் செய்யமாட்டார். ஏன்? காத்திருக்கும் காலத்தை உபயோகித்து, நாம் அவர்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை பெரிதாக்குகிறார். மேலும்,நமக்குள் மாற்றத்தையும், வளர்ச்சியையும் கொண்டு வருகிறார்.

நாம், நம்முடைய வாழ்க்கையில் அதிகமான நேரத்தைக் காத்திருப்பதில் செலவழிக்கிறோம். ஏனென்றால்,மாற்றம் என்பது ஒரு செயல்பாடு.அநேகம்பேர், மாற்றத்தை விரும்புகிறார்கள்.ஆனால், காத்திருப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.ஆனால், நாம் காத்திருக்கவேண்டும் என்பதுதான் உண்மை. சரியான வழியில் காத்திருக்கப் போகிறோமா? அல்லது தவறான வழியில் காத்திருக்க போகிறோமா? என்பதுதான் கேள்வி. தவறான வழியில் காத்திருந்தால், நாம் பரிதாபத் துக்குள்ளாகி விடுவோம். கர்த்தருடைய வழியின்படி காத்திருந்தால், நாம் பொறுமையுள்ளவர்களாகவும், காத்திருத்தலின் பலனைப் பெறுகிறவர்களாகவும் இருப்போம். அதற்கு நமக்கு பயிற்சி அவசியம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் கர்த்தர், நமது பொறுமை வளரவும், ஒரு கிறிஸ்தவனின் முக்கியமான குணத்தை அடையவும் உதவி செய்வார். பொறுமை என்பது ஆவியின் கனிகளில் ஒன்றாகும் (கலாத்தியர் 5:22). அது, சோதனையின் மத்தியில்தான் வளரும். அதனால், கடினமான சூழ்நிலைகளிலிருந்து நாம் ஓடிவிடக்கூடாது. பொறுமையில் வளரும்போது, இறுதியில் ஒன்றிலும் குறைவில்லாதவர்களாய் திருப்தி அடைவோம் என்று வேதம் சொல்கிறது. நாம், தேவனோடுகூட உள்ள உறவில் முன்னேறுவோம். என் வாழ்க்கையிலும்கூட ஒவ்வொரு மாற்றத்தினாலும் முதிர்ச்சி பெற்றிருக்கிறேன். இவற்றைப் பார்க்கும்போது விசுவாசத்தில், காலம் என்பது எவ்வளவு முக்கியம் என்பதைக் காணமுடிகின்றது. நாம் கேட்ட ஒவ்வொன்றையும் கர்த்தர் உடனடியாகக் கொடுத்திருந்தால், நாம் வளர்ச்சியடைந்திருக்கமாட்டோம், முன்னேறியிருந்திருக்கமாட்டோம். காலமும், விசுவாசமும் இணைந்து செயல்படுகின்றன.

"காத்திருக்கும் காலத்தை உபயோகித்து, நாம் அவர்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை பெரிதாக்குகிறார்"

நாம், நம்மை முழுமையாகக் கர்த்தருடைய வேளைக்கு ஒப்புக் கொடுத்தோமானால், முழுமையான அமைதியையும்,சந்தோஷத்தையும், பெறலாம். வேதத்தில் யோசேப்பு,கர்த்தர்,அவனுக்குத் கொடுத்த சொப்பனங்கள் நிறைவேறுவதற்கு வெகு காலம் காத்திருந்தான்.கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்திரத்தின் பாதையிலே வெகுகாலம் நடத்தி சென்றார். ஏனென்றால், அவர்கள் பக்குவப்படவில்லை. நமக்கும் அதேபோல பக்குவப்பட பயிற்சி தேவை.அதற்கு நாம் செய்ய வேண்டியது, கர்த்தர் சொல்வதை மாத்திரம் செய்து கொண்டிருப்பது, எதைப்பற்றியும் யோசிக்காமல். சில வேளைகளில் கர்த்தர் நம்மை நடத்தும் விதத்தை, வழிகளை நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. நாம் நம்மை தாழ்த்தி, கர்த்தாவே,எனக்கு என்ன செய்வதென்றுத் தெரியவில்லை, உம்மை நம்புகிறேன் என்று சொல்லும்போது,அவர் நம்மை சரியான நேரத்தில் உயர்த்துவார். சரியான நேரம் என்பது கர்த்தருடைய வேளை.அவர்,ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு காலகட்டத்தை வைத்திருக்கிறார். மற்றவர்களுக்கு அறுப்பின் காலமாக இருக்கலாம். உங்களுக்கு விதைப்பின் காலமாக இருக்கலாம். அதை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். உங்களுக்காக சிறந்தவற்றைக் கர்த்தர் செய்துகொண்டிருக்கிறார்.




உங்களது வாழ்க்கையில் போராட்டமா? உங்களது பிள்ளையின் திருமணம், தடைபட்டுக்கொண்டே இருக்கின்றதா? வேலை கிடைக்கவில்லையா? வெளிநாடு செல்வது தள்ளிப்போய்க்கொண்டே இருக்கின்றதா? வரவேண்டிய பணம், இன்னும் வரவில்லையா?

குழந்தை பாக்கியம் இல்லையா? வாழ்க்கையில், பொருளாதார செழிப்பே இல்லையா? உங்களது அன்பை, உங்களது பிள்ளை புரிந்துகொள்ளவில்லையா? கணவன், மனைவிக்குள் ஒருமனம் இல்லையா? உங்களை மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லையா?

தொடர்ந்து வியாதியினால் கஷ்டப்படுகிறீர்களா? செய்கின்ற வேலையில் திருப்தி இல்லையா? நிரந்தரமான வேலையும் வருமானமும் இல்லையா? சொந்தமாக வீடு இல்லையா?

எப்போது எனக்கு ஒரு தீர்வு கிடைக்கும்? எப்போது மன நிம்மதியும், சமாதானமும் வரும்? இப்படியெல்லாம் நினைக்கிறீர்களா?

எத்தனையோ, ஜெபக் கூட்டங்கள், உபவாசக்கூட்டங்களில் கலந்து கொண்டாயிற்று, ஒன்றும் நடக்கவில்லை. எனக்கு எப்போது விடிவுகாலம்? எப்போது என்னுடைய போராட்டம், கவலை, சோர்வு தீரும்? என்று உங்களது மனது குமுறுகிறது.

உங்களைப் பொறுத்தவரை (உங்களது பார்வையில்) நீங்கள் சரியாகத்தான் இருக்கிறீர்கள். எந்த குற்றத்தையும் உங்களிடத்தில் சுட்டிக்காட்டமுடியாது. யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யவில்லை. கஷ்டத்தின் மத்தியிலும், உங்களிடத்தில் குறை காண முடியாதபடி வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால், காரியம் நடக்கவில்லை. அதுதான் உங்களுக்கு புதிராக உள்ளது.

என்னதான் வழி? எவ்வளவோ யோசித்துப் பார்த்தாயிற்று, ஒன்றும் புலப்படவில்லை. யோசனைகள்தான் மிஞ்சினது. எனக்கு ஒரு அற்புதத்தைக் கர்த்தர் செய்யவேண்டுமென்றிருக்கிறது. அந்த அற்புதம் நடந்துவிட்டால் போதும், நான் நிம்மதியாக மூச்சுவிடுவேன்.

அதிகமாக நான் ஆசைப்படவில்லை. என் தேவைகள் சந்திக்கப்பட்டால் போதும். எனது எதிர்பார்ப்புகள் மிகவும் நியாயமானவை என்பதைக் கர்த்தரே அறிவார். எத்தனையோ தேவ மனிதர்கள், தீர்க்கதரிசிகள் மூலம் கர்த்தர் பேசினாரே. ஆனாலும், அற்புதம் நடக்கவில்லை.

துதியுங்கள், அப்பொழுது உங்களது போராட்டமான எரிகோ கோட்டை இடிந்துவிடும் என்றார்கள். துதித்தும் பார்த்துவிட்டேன். ம்ஹம்ம்... ஒன்றும் நடக்கவில்லை.



சாத்தானால்தான் எனக்கு கஷ்டங்கள் இருக்கலாம் என்று நினைத்து, பாவம் என்று நினைக்கும் எல்லாவற்றுக்கும் என்னை விலக்கி என் பரிசுத்தத்தை காத்துக் கொண்டேன். இதிலும் பலன் கிடைக்கவில்லை.

நான் என்ன செய்வது? உயர்வு, ஆசீர்வாதம், செழிப்பு என்பவைகளெல்லாம் எனக்கு அந்நியமாகிப் போய்விட்டதே? என்னால் இயல்பானதொரு வாழ்க்கையை வாழ முடியாதா? இயேசு கிறிஸ்து ஏன் என்மேல் கோபமாய் இருக்கிறார்? என்றெல்லாம் நினைக்கின்றீர்களா?

''உன் நம்பிக்கை வீண் போகாது; முடிவிலே அது விளங்கும்'' இந்த வார்த்தையை எவ்வளவோ தடவை கேட்டாயிற்று. ஒன்றும் நடக்கவில்லை. இதேபோல இன்னும் பல வார்த்தைகளை நான் உங்களுக்குச் சொல்ல முடியும் என்று சொல்கின்றீர்கள், இல்லையா?

ஒரு மனுஷன் நான் இவ்வளவு காரியங்களை யோசிக்கிறேனென்றால், நம்மை உண்டாக்கின தேவன் எவ்வளவு யோசிப்பார்? ஒரு நிமிடம் உங்கள் கண்களை மூடி, இதுவரை கடந்த காலத்திலெல்லாம், கர்த்தர் உங்களது வாழ்க்கையில் செய்த காரியங்களையெல்லாம் ஒவ்வொன்றாக உங்கள் மனக்கண் முன்பாகக் கொண்டுவந்து நினைத்துப் பாருங்கள். அந்தக் காரியங்களெல்லாம் உங்களது வாழ்க்கையில் தானாக நடந்தேறவில்லை. கர்த்தர்தான் நடத்தினார். தானாக ஒரு செயல் நடப்பதில்லை. தேவனே எல்லாக் காரியங்களையும் நடப்பிக்கிறார்.

நம்மைப்போல ஒரு மனுஷனாக இந்தப் பூமியில் வாழ்ந்தவர் நம் தேவன். நம்முடைய கஷ்டங்களை, போராட்டங்களை, சோர்வுகளை, தடைகளைக் கர்த்தர் அறிவார். சகலமும் அவருக்கு வெளியரங்கமாயிருக்கின்றது; அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. மனுஷன், முகத்தைப் பார்ப்பான்; ஆனால், கர்த்தரோ, உங்களது இருதயத்தைப் பார்க்கிறார் *(1 சாமுவேல் 16:7)*. உங்களது இருதயத்தின் காயங்கள், ஏமாற்றங்கள், ஏங்கல்கள், விருப்பங்கள், வாஞ்சைகள், தேவைகள், இளைப்பு, சோர்வு எல்லாவற்றையும் அவர் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்.

நீங்கள் திருமணம் செய்யவேண்டுமென்று ஒரு வாழ்க்கைத் துணையை அவர் தீர்மானித்து வைத்திருக்கிறார். அந்த நபரை நீங்கள் சந்திக்கும்வரை நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டும். உங்களுக்கென்று ஒரு வேலையை அவர் தயார் செய்து வைத்துள்ளார். உங்களை அதற்கு தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். அதுவரை நீங்கள் பொறுத்திருக்கத்தான் வேண்டும். உங்களுக்கென்று ஒரு வீட்டை கர்த்தர் வைத்திருக்கிறார். அந்த வீட்டை நீங்கள் பெறுவதற்கு முன்பு, ஒரு வீடு என்றால் என்ன என்பதையும், அதன் மதிப்பையும் உங்களை உணர வைக்கின்றார். மற்றவர்களிடமிருந்து நல்ல பெயர் வாங்குவதற்கு முன்பு, கர்த்தருடைய பார்வையில் நல்லவர்களாக இருங்கள். உங்களை நீங்களே மேன்மையாகப் பார்க்காதீர்கள். கர்த்தருடைய வேதத்தின் வார்த்தைகளின்படி உங்களது சிந்தனைகளை, செயல்களை எடைபோட்டு பாருங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கர்த்தருடைய வேதத்தை இரவும், பகலும் தியானியுங்கள். அதுதான் வெற்றிக்கான வழி. இரவும், பகலும் நீங்கள் வேதத்தைத் தியானிக்கும்போது, உங்களது காரியங்களெல்லாம் வாய்க்கும். யார், வேதத்திற்குத் தன் வாழ்க்கையில் பிரதானமான இடம் கொடுக்கிறானோ, அவனுக்குக் கர்த்தர் முதலிடம் கொடுப்பார்.

இரவும், பகலும் வேதத்தை தியானித்துப் பாருங்கள், அற்புதம் உங்களைத் தேடி வரும். ஆமென்!